**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 83/2018 Date:15.04.2025**

**(P.W.1)- ஜோசப் ஹென்றி லியோ**

<u>குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**</u>

1. நான் தாக்கல் செய்துள்ள எதிர் கோரிக்கை மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் முதல் பக்கத்தில் மேல்புறம் இடது பக்கத்தில் தமிழ்நாடு என்றும் வலது பக்கத்தில் E 860537 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்திரைத்தாள் ஆவணத்தின் விற்பனையாளர் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 4882, தேதி-06.11.2007 என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-1 ஆவணத்தில் முதல் பக்கத்தில் மேல்புறம் இடது பக்கத்தில் தமிழ்நாடு என்று குறிப்பிட்டுள்ளது ஆனால், வலது பக்கத்தின் எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர் எண் 1694, நாள் 13.06.2003 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன வா.சா.ஆ-1 ஆவணம் பிரான்சிஸ் என்ற நபரின் பெயரை குறிப்பிட்டு பின் அது அடிக்கப்பட்டு ஞான செல்வம் என்ற பெயர் குறிப்பிடப்பட்டு அதுவும் அடிக்கப்பட்டு வாடிவிளை என்று குறிப்பிட்டு அதுவும் அடிக்கப்பட்டு பின் பள்ளவிளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ-1 ஆவணம் மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து சான்றிட்ட நகலை எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மேற்படி வா.சா.ஆ.1 ஆணம் போலியான ஆவணம் என்று தெரியவரும் என்றால் சரியல்ல. நான் வில்லங்கச் சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நினைவில்லை. மேற்படி வா.சா.ஆ 1 ஆவணம் மோசடியான ஆவணம் என்று தெரிந்துவிடும் என்பதால் நான் வில்லங்கச் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**(P.W.1)- ஜோசப் ஹென்றி லியோ**

குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**

3. நான் வா.சா.ஆ-2 ஆவணத்தின் மூலம் அந்தோணிமுத்து என்பவரின் தலக்குளம் கிராம், புல எண் 450/8, வில்லங்கம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின் மோசடி வில்லங்கப் பதிவை சார்பதிவாளர் அலுவலகத்தில் நீக்க வேண்டும் என்று எதிர்கோரிக்கையாக கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 ஆவணம் போலி என்று நிருபணம் ஆகும்பட்சத்தில் என்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றால் எடுத்துக்கொள்ளலாம். இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் எதிர்கோரிக்கை மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்